# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.89/2018

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.5** |
| **Name** | **:** | திரு.மகேந்திரன் |
| **Father's Name** | **:** | சந்திரன் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

2,3 எதிரிகள் ஆஜர். 4ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1ம் எதிரி இறந்துவிட்டார்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2023.**

முதல் விசாரணை -

நான் வடகல்பாக்கத்தில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். இறந்த பிரேம்குமாரை பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் இவ்வழக்கிற்காக என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. இந்த வழக்கை பற்றி என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

அசோக்கை தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகசர்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது <u>அ.சா.ஆ.2</u>. என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணத்தில் (கைப்பற்றுதல் மகசர்-1) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். <u>அது அ.சா.ஆ.3</u>. என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணத்தில் (கைப்பற்றுதல் மகசர்-2) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். <u>அது அ.சா.ஆ.4</u>.

15 வருடத்திற்கு முன்பு சுமார் காலை 9 மணிக்கு சிப்பந்தியும் மணியக்காரரும் என்னை கூப்பிட்டார்கள். நான் போனேன். அங்கு ஊர்க்காரர்கள் இருந்தார்கள். போலிசார் இருந்தார்கள். கையொப்பம் கேட்டதால் போட்டேன். 14.2.2007 அன்று காலை 7 மணிக்கு சம்பவ இடத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோதும், சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண் மற்றும் சாதாரண மண் மாதிரிகளை எடுத்தபோதும், சம்பவ இடத்தில் பிரேதத்திற்கு அருகில் இருந்த சந்தன கலர் காட்டன் ரெடிமேட் சட்டை ஒன்றும், பிரேதத்தின் கையில் இருந்த கருப்பு கை கடிகாரம், பிரேதத்தின் பேன்ட் பட்டையில் இருந்து செல்போன் பவுச் ஒன்றும், பவுச்சிற்கான கொக்கி ஒன்றும் Headphone ஒன்றும், தீப்பெட்டி ஒன்றும்

பிரேதத்தில் காலில் இருந்த கருப்பு நிற செருப்புகள் எண்ணிக்கை-2 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றும்போது நானும் அசோக் என்பவரும் உடனிருந்து கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி தான். கையொப்பம் போட்டது எல்லாம் ஊர்க்காரர்கள் கேட்டதால் கையொப்பம் போட்டேன் என்றால் சரி தான். போலிசார் என்னிடம் எந்த கையொப்பமும் கேட்கவில்லை. போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரி தான். என் முன்னிலையில் போலிசார் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றாலும், படம் எதுவும் வரையவில்லை என்றாலும் சரி தான். தடய பொருட்கள் எதுவும் சம்பவ இடத்தில் கைப்பற்றவில்லை என்றால் சரி தான். போலிசார் இன்று அழைத்ததால் தான் நான் வந்து சாட்சியமளிக்கிறேன் என்றாலும், மற்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.